


https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

01st SEPTEMBER 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 95

# ஜனாதிபதி முன் பாய்ந்த முதுகெலும்புள்ள தேர்தல் அதிகாரிகள்



கடந்த வெள்ளிக்கிழமை மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவான "இயலும் சிறிலங்கா" நிகழ்வுக்குள் பாய்ந்து அதற்கு எதிராக தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

02 ▶

## காலாவதியான வதிவிட விசா:

# துபாயில் இன்று முதல் 2 மாதங்கள் சலுகைஅமுல்

காலாவதியான வதிவிட விசா உள்ளவர்கள் தங்கள் நிலையைப் பாதுகாக்க அல்லது அபராதம் செலுத்தாமல் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்பை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இன்று (01) முதல் வழங்குகிறது.

அடையாளம், குடியுரிமை, சுங்கம் மற்றும் துறைமுகப் பாதுகாப்புக்கான பெடரல் ஆணையத்தால் இந்த முயற்சி வியாழக்கிழமை தொடங்கப்பட்டது.

காலாவதியான ஆவணங்களைக் கொண்ட நபர்களுக்கு "தங்கள் நிலையை முறைப்படுத்த" வாய்ப்பை வழங்குவதற்காக சலுகைக் காலம் அறிமுகப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

– விசா காலாவதி விதிகள் என்ன?

அக்டோபர் 2022 இல்

02 ▶

# வரி செலுத்தாத வேட்பாளர்களுக்கு ஆப்பு

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் செலுத்த வேண்டிய வரியை செலுத்தி இருக்கிறார்களா என்று வருமான வரி திணைக்களம் தேடத் தொடங்கியுள்ளது.

வேட்பாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள சொத்து விபரங்களின் அடிப்படையில் 11 லட்சத்துக்கு மேல் வருமானம் இருந்தால் கட்டாயம் வரி செலுத்தியாக வேண்டும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தேர்தல் கேட்பது குடும்பத்துக்கே தெரியாதாம்

இந்த ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.அவர்களில் அதிகமானோர் யாரென்றே மக்களுக்குத் தெரியாது.

அதைவிட நகைச்சுவையான விடயம் என்னவென்றால் அவர்கள் போட்டியிடுவது அவர்களின் குடும்பங்களுக்கே தெரியாதாம். அவ்வாறு 10 வேட்பாளர்கள் உள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

39 வேட்பாளர்களில், 15 வேட்பாளர்கள்தான் பிரசார பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



புதுசுடர்
www.puthusudar.lk
2024 SEPTEMBER 01 - SUNDAY

# ரணில் தோற்றால் மீண்டும் வரிசை யுகம்?

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தத் தேர்தலில் தோல்வியடைந்தால் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைந்துவிடும் என்றும் வரிசை யுகம் தோன்றிவிடும் என்றும் ரணில் தரப்பு பிரசாரம் செய்து வருகிறது.

அப்படி நடப்பதாகவிருந்தால் ஒரேயொரு காரணத்தால் மாத்திரம்தான் நடக்கும்.

அது பொருளாதாரம் என்பது ரணிலோடு மாத்திரம் ஒட்டியிருக்கின்ற ஒன்றாக இருக்க வேண்டும். ரணிலுக்கு மாத்திரம் சொந்தமான ஒன்றாக இருக்க வேண்டும்.

அப்படி இருந்தால் மாத்திரம்தான் ரணில் போனால் அது ரணிலுடனேயே போகும். ரணில் வந்தால் அது ரணிலுடனேயே வரும்.

பொருளாதாரத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் ரணிலின் தோல்வியிலும் தங்கியில்லைவெற்றியிலும் தங்கியில்லை..

இனி வருகின்ற ஜனாதிபதி எவ்வாறு நடந்துகொள்கிறாரோ அதில்தான் தங்கியுள்ளது.

திறமையாக செயற்பட்டால் எழும். கோத்தாபோல கிறுக்குத்தனமாக செயற்பட்டால் விழும்.

2015 இல் மைத்திரி-ரணில் அரசு மஹிந்தவிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன் வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்திருந்தது.

கைப்பற்றியதும் எரிபொருள்,சீனி மற்றும் பருப்பு உள்ளிட்ட 10 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உடனடியாகக் குறைத்து வாழ்க்கைச் செலவீனத்தை ஒரு நல்ல நிலைமைக்குள் கொண்டு வந்தனர்.

ஆனால், ஆட்சியைக் கைப்பற்றி இரண்டு மாதங்களில் மத்திய வங்கி கொள்ளை இடம்பெற்றதால் மீண்டும் பொருளாதாரம் ஆட்டங்காணத் தொடங்கியது.

2019இல் கோத்தா ஆட்சியைக் கைப்பற்றியபோதுகூட சாதாரண நிலைமையே இருந்தது.பிறகு அவர் பார்த்த மேதாவித்தனமான-கிறுக்குத்தனமான வேலையால்தான் பொருளாதாரம் வீழ்ந்தது.

எதுவித மாற்றங்களும் செய்யாமல் ஓடிக்கொண்டிருந்த நாட்டை அப்படியே ஓடவிட்டு சும்மா பார்த்துக்கொண்டு இருந்திருந்தால்கூட நாடு தப்பி இருக்கும்.

இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் பொருளாதாரம் வீழ்வதும் எழுவதும் வருகின்ற ஆட்சியாளர் பார்க்கின்ற வேலையால்தான் என்பதாகும்.

கோத்தா விரட்டப்பட்டதன் பின் ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றிய ரணில் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று கடன் வாங்கியும் வெளிநாட்டு கடன்களை செலுத்துவதை நிறுத்தியுமே வரிசை யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

இந்த வேலையை கோத்தாவே செய்திருக்கலாம்.அதுவும் ஆரம்பத்திலேயே செய்திருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் நாணய நிதியத்தை நிபந்தனைகளும் கடுமையாக இருந்திருக்காது.இந்த வரிசை யுகம் ஏற்பட்டிருக்காது.

இதை கோத்தா செய்யத் தவறியது ஏன்? அவரது ஆட்சிக்குள் இது தொடர்பில் இரண்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஒரு தரப்பு நாணய நிதியத்திடம் போக வேண்டும் என்றது.இன்னொரு தரப்பு போகக்கூடாது என்றது.

இதனால் போவதா,இல்லையா என்று யோசித்துக்கொண்டு இருக்கும்போதே வெள்ளம் தலைக்கு மேல் வந்துவிட்டது.

ஆகவே, பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஆட்சி மாற்றம் காரணமல்ல.ஆட்சியைக் கைப்பற்றுகிறவர் எடுக்கின்ற முடிவில்தான் எல்லாம் தங்கியுள்ளது..

## காலாவதியான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ICP இன் புதுப்பிப்புகளைத் தொடர்ந்து, தங்கள் விசாவைக் கடந்து செல்லும் சுற்றுலாப் பயணிகள் அல்லது குடியிருப்பாளர்களுக்கான அபராதம் ஒரு நாளைக்கு 50 திர்ஹம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வதிவிட விசா வைத்திருப்பவர்கள் நாட்டை விட்டு வெளியேறவோ அல்லது அவர்களது விசா காலாவதியாகிவிட்டாலோ அல்லது ரத்து செய்யப்பட்டாலோ தங்களுக்கான தொழிலை கண்டுபிடித்து தங்கள் நிலையை மாற்றிக்கொள்ள ஆறு மாதங்கள் அவகாசம் அளிக்கப்படுகிறது.

தற்போதுள்ள ஆறு மாத கால அவகாசத்திற்கு அப்பால் சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருப்பவர்களுக்கு பொதுமன்னிப்பு இரண்டு மாதங்கள் வழங்கப்படுவதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**இது ஜனாதிபதியின் முன்னிலையிலேயே இடம்பெற்றுள்ளது.**

**தேர்தல் வேலைகளுக்காக அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்ற அடிப்படையிலேயே அதிகாரிகள் அங்கு பாய்ந்து நிகழ்வை வீடியோ எடுத்து இது தொடர்பில் மஹரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.**

**அங்கு கலந்துகொண்ட இளைஞர்களுக்காக வழங்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்த உணவு பொருட்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.**

**தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

# சுப்ரோடோ கோப்பை சர்வதேச போட்டிக்கு அப்துல் மாலிக் சூனோ தெரிவு

(பரீட் இக்பால்)

இந்திய கால்பந்து கூட்டமைப்பு மற்றும் இந்திய விமானப்படை இணைந்து 62 ஆவது முறையாக நடத்தும் சுப்ரோடோ கோப்பை சர்வதேச போட்டி செப்டம்பர் 02 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

சுப்ரோடோ கோப்பை சர்வதேச போட்டிக்கு ஸ்ரீலங்கா மாணவர்கள் சார்பில் டி.பி.ஜாயா ஸாஹிரா கல்லூரி மாணவன் அப்துல் மாலிக் சூனோ என்பவரும் கல்வி அமைச்சின் அனுமதியுடன் இலங்கை பாடசாலைகளின் உதைபந்தாட்ட சங்கம் தேர்ந்தெடுத்துள்ளது.








SEPTEMBER 2024
INTAKE
UK Endorsed
Diploma Programs
UK Diploma In Psychology and Counseling
UK Diploma In Information Technology
UK Diploma In Teacher Training
UK Diploma In Business Management
UK Diploma In Early Childhood Education
UK Diploma In English
10% Discount for the First 100 Students
Recognitions
City & Guilds Approved Centre
bcs The Chartered Institute for IT
Skill Development Council Canada
BRITISH COUNCIL
IIC UNIVERSITY OF TECHNOLOGY
QUALIFI
Member of : FITIS
UK Qualified
HND Programs
HND (UK) in Psychology and Counseling
HND (UK) In Information Technology
HND (UK) In Teacher Training
HND (UK) In Business Management
HND (UK) In English
TOP UP DEGREES
Bachelor's of Education
BA in English
Bachelor's of Psychology
Bachelor's of Business Admin (BBA)
WHED
UGC RECOGNIZED
WES WORLD EDUCATION SERVICES APPROVED
+94773 208 023
AMAZON COLLEGE Where Success Begins
AMAZON COLLEGE & CAMPUS
294, 2nd Floor Galle Road, Colombo-4.
+94112591110 / +94114386126
info@amazoncollege.lk
www.amazoncollege.lk
WHERE SUCCESS BEGINS 15TH YEARS ANNIVERSARY



# அனுர வென்றால் நாடு அவ்வளவுதான்...

**சரத் பொன்சேகாவின் பிரச்சினை வேறு.அவர் ஒன்றரை வருடங்களாக ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.**

**அதை வழங்க மறுத்ததால்தான் அவர் கட்சியை விட்டுப் போனார்.**

**கேள்வி : ரிசாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீம் போன்றோர் உங்களுடன் இணைந்திருந்தாலும்கூட, அவர்களது கட்சியைச் சேர்ந்த பல எம்பிக்கள் ஜனாதிபதியின் பக்கம் போய்விட்டார்கள்.அது உங்களுக்கு பாதிப்பில்லையா ?**

**கேள்வி : உங்கள் கட்சியில் மேலும் எம்பிக்கள் இணைவதற்கு உள்ளார்களா ?**

**கேள்வி : மறுபுறம்,உங்கள் கட்சியில் இருந்த சரத் பொன்சேகா,ராஜித சேனாரத்ன மற்றும் தலதா அத்துகோரல போன்ற முக்கியஸ்தர்கள் சென்றுவிட்டார்களே ?**

**கேள்வி : மக்கள் செல்வாக்கு இல்லாதவர்களையெல்லாம் ஏன் உங்கள் கட்சியில் இணைத்துக்கொண்டு போகிறீர்கள்?**

**கேள்வி : நீங்கள் ஆட்சிக்கு வந்து எவ்வளவு காலத்துக்குள் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கும்..வரி குறையும்?**

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் இப்படி பிரிந்து நிற்பதால் வெற்றியின் சாதகம் ஜேவிபிக்கு அதிகம்.இதை எப்படி தடுக்கப் போகிறீர்கள் ?**

*இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட பிரதி தவிசாளரும் முன்னாள் எம்பியுமான சுஜீவ சேரசிங்க. அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.*

**கேள்வி :** ரிசாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீம் போன்றோர் உங்களுடன் இணைந்திருந்தாலும்கூட,அவர்களது கட்சியைச் சேர்ந்த பல எம்பிக்கள் ஜனாதிபதியின் பக்கம் போய்விட்டார்கள்.அது உங்களுக்கு பாதிப்பில்லையா ?

**பதில் :** இல்லை.அவர்கள் அந்தக் கட்சிகளின் வாக்குகளால் வந்தவர்கள்.அந்த வாக்குகள் அந்தக் கட்சிகளுக்கு உரியது. அவர்கள் போனாலும் மக்கள் அந்தக் கட்சிகளுடன்தான் உள்ளார்கள்.

அவர்களின் பிரிவு எந்தவகையிலும் எமக்கு பாதிப்பை ஏற்படுத்தாது .

**கேள்வி :** உங்கள் கட்சியில் மேலும் எம்பிக்கள் இணைவதற்கு உள்ளார்களா ?

**பதில் :** அதிகமானவர்களை இணைத்துள்ளோம்.நாம் வெற்றிபெறுவோம் என்று தெரிந்ததால்தான் அவர்கள் எம்முடன் இணைந்துள்ளனர்.

சஜித் குடும்ப அரசியல் நடக்காததால் சென்றுவிட்டார்.

தலதா 2010 இல் இருந்து ரணிலை ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவ பதவியில் இருந்து விளக்க வேண்டும் என்று போராடி வந்தவர்.ஆனால்,இறுதியில் அவரும் மாறிவிட்டார்.

**கேள்வி :** மக்கள் செல்வாக்கு இல்லாதவர்களையெல்லாம் ஏன் உங்கள் கட்சியில் இணைத்துக்கொண்டு போகிறீர்கள் ?

பதில் : அவர்கள் சஜித் மீது நம்பிக்கை வைத்து வருகிறார்கள். அவர்களை வெல்ல வைத்தது ஜேவிபிதான்.

சந்திரிகாவின் அரசில் அமைச்சர்களாக இருந்தார்கள். அவர்கள் அதில் சாதித்தது எதுவுமில்லை. அப்படியென்றால் நாம் மட்டும்தான் யாருடனும் சேரவில்லை.அதனால் நாம் பிரிந்து நிற்பதால் ஜேவிபிக்கு வெற்றி வாய்ப்பு செல்லாது.

**கேள்வி:** சஜித்துக்கு சவாலாக இருப்பது ரணிலா, அனுரவா?

**பதில்:** இருவரும் சவால்தான்.

செய்யமாட்டார்.திருடர்கள் அவருடன் இல்லை என்று நிரூபிக்கப்பட்டதனாலேயே அவர்கள் இணைந்துள்ளனர்.

இன்னும் 25 பேரை இணைக்கும் வாய்ப்பிருந்தும் நாம் அதை கைவிட்டுவிட்டோம்.

இனவாதம் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் அவர்கள்மீது இருப்பதே அதற்குக் காரணம்.இருந்தாலும்,நாம் வெற்றி பெறுவோம்.

**கேள்வி :** மறுபுறம்,உங்கள் கட்சியில் இருந்த சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன மற்றும் தலதா அத்துகோரல போன்ற முக்கியஸ்தர்கள் சென்றுவிட்டார்களே?

**பதில் :** இந்த விடயத்தில் 50 கோடி ரூபா வரையான நிதி கைமாறப்பட்டுள்ளது.பலர் வாங்கியுள்ளமை எனக்குத் தெரியும்.

சரத் பொன்சேகாவின் பிரச்சினை வேறு.அவர் ஒன்றரை வருடங்களாக ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்.அதை வழங்க மறுத்ததால்தான் அவர் கட்சியை விட்டுப் போனார்.

ராஜித சேனாரத்ன ரணிலும் சஜித்தும் ஒன்றிணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தார்.அது அது நாட்டுக்கு நல்ல செய்தியைக் கொடுக்கிறது.சஜித் பொருத்தமானவர் என்பதால்தான் எல்லோரும் இணைகிறார்கள் என்ற தகவல் சொல்லப்படுகிறது.

அப்படியானதொரு நிலைமை எமது தேர்தல் வெற்றிக்கு அவசியம். அதனால்தான் நாம் அவர்களை இணைத்துக்கொள்கிறோம்.

கேள்வி : நீங்கள் ஆட்சிக்கு வந்து எவ்வளவு காலத்துக்குள் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கும்.. வரி குறையும் ?

பதில் :இது தொடர்பில் நாம் இன்னும் இறுதி முடிவெடுக்கவில்லை.இது தொடர்பில் கலந்தாலோசித்து முடிவொன்றை எடுப்போம்.

**கேள்வி :** ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் இப்படி பிரிந்து நிற்பதால் வெற்றியின் சாதகம் ஜேவிபிக்கு அதிகம்.இதை எப்படி தடுக்கப் போகிறீர்கள் ?

**பதில் :** நாம் எந்தக் கட்சியுடனும் டீல் வைக்கவில்லை. ஆனால், ஜேவிபி அப்படியல்ல. அவர்கள் சந்திரிகாவுடன் இருந்தார்கள். மஹிந்தவுடன் இருந்தார்கள், மைத்திரியுடன் இருந்தார்கள்.

நாமல் ராஜபக்சகூட எமக்கு சவால்தான். அனுர வென்றால் நாடு தப்பாது.

எனக்கு அனுரமீதோ ஜேவிபி மீதோ எனக்கு கோபம் கிடையாது. அவர்கள் திருட்டை அம்பலப்படுத்துவதால் அவர்களை எனக்கு பிடிக்கும். அவர்களில் பலர் நாடாளுமன்றில் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இந்த முறை நாடு வீழ்ந்தால் அவ்வளவுதான்.அதன் பின் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.எல்லோரும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

திருடாமல்–கொமிசன் வாங்காமல்–திருடர்களுக்கு தண்டனை வழங்கி நாட்டைக் கட்டியெழுப்ப சஜித் பிரேமதாஸாவால் மாத்திரமே.

அவர் யாருடனும் டீல் இல்லை.திருடர்களுடன் உறவில்லை,யாரையும்–எந்தத் திருடனையும் பாதுகாக்க வேண்டிய தேவை அவருக்கில்லை.

நான் குற்றமிழைத்தால்கூட என்னையும் தண்டிப்பார். சட்டத்தை எல்லோருக்கும் சமமாக அமுல்படுத்தினால் வெளிநாட்டு முதலீடுகள் தானாக வரும்.நல்லதோர் ஆட்சி மலர்ந்தால் இங்கு முதலீடு செய்வதற்குப் பலர் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

# செலான் வங்கி, 240ஆவது 'செலான் பகசர' நூலகம்



செலான் வங்கி அண்மையில் தனது 240ஆவது செலான் பகசர நூலகத்தை கொட்டம்பிட்டிய முஸ்லிம் மத்திய கல்லூரியில் திறந்து வைத்ததன் மூலம் இலங்கைச் சிறுவர்களிடையே வாசிப்பு மற்றும் கற்றல் கலாச்சாரத்தை வளர்ப்பதில் தனது கவனத்தை தொடர்ந்து செலுத்தி வருகிறது.

கற்றல் தேவை மற்றும் அபிலாஷைகளை வளர்க்கும் சூழலை உருவாக்கும் முகமாக வளங்கள் அதிகம் தேவைப்படும் பாடசாலைகளில் 2026ஆம் ஆண்டளவில் 300 செலான் பகசர நூலகங்களை நிறுவும் வங்கியின் இலக்கை அடைவதில் இது சமீபத்திய படியாகும்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக நடைமுறையிலுள்ள செலான் பகசர முயற்சியில் கல்வி அமைச்சுடன் செலான் வங்கியின் பகுதி முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து கல்விக்கு உகந்த சூழலை உருவாக்குவதில் உதவி தேவைப்படும் பாடசாலைகளைக் கண்டறிவதில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில், கொட்டம்பிட்டிய முஸ்லிம் மத்திய கல்லூரி உதவி தேவைப்படும் பாடசாலைகளில் ஒன்றாக இனங்காணப்பட்டு, செலான் பகசர முயற்சி ஊடாக நூலகத்திற்கு பரந்த அளவிலான புத்தகங்களுடன் இரண்டு கணினிகள், பல்லூடகப் படவீழ்த்தி மற்றும் அகலத் திரை (wide screen) ஆகியவை உள்ளடங்கலாக அடிப்படை தொழில்நுட்ப வசதிகள் வழங்கப்பட்டது. மேலும் வங்கியானது தற்போதைய நூலக உட்கட்டமைப்பை மதிப்பீடு செய்து அதன் தளபாடங்கள், கூரை மற்றும் தரை ஆகியவற்றை மேம்படுத்தியது. இது மாணவர்களுக்கு அறிவை வளர்ப்பதற்கும், அறிவுத்திறனை கூர்மைப்படுத்துவதற்கும் ஊக்கமளிக்கும் சூழலை உருவாக்குகிறது.

# SLT-MOBITEL நடுத்தர வருமான வளர்ச்சி



SLT - Mobitel நிறுவனமானது 2024இல் முடிவடைந்த அரையாண்டில் நடுத்தர வருமான வளர்ச்சியை பதிவு செய்துள்ள அதே வேளை செலவு கட்டுப்படுத்தல் முயற்சிகள் மூலம் சேமிப்பை வெளிப்படுத்தியுள்ளது. சவாலான சந்தை சூழலின் மத்தியில் 2024இன் முதற் பாதியில் SLT-MOBITELஇன் செயல்திறன் அதன் நெகிழ்வுத்தன்மை மற்றும் இணக்கத்தன்மையை சுட்டிக் காட்டுகிறது.

வெற்றிகரமான செலவு-சேமிப்பு முயற்சிகளுடன் கூடிய நடுத்தர வருமான வளர்ச்சி குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு வழிவகுத்துள்ளன.

2024இன் முடிவடைந்த அரையாண்டில் குழுமத்தின் மொத்த வருமானம் ரூ. 53.5 பில்லியனை எட்டியுள்ளமை கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1.6% அதிகரிப்பைக் காட்டுகிறது. குழு மட்டத்தில் மொத்த இலாபம் 4.0%ஆல் அதிகரித்து ரூ. 20.9 பில்லியனாக உள்ளது.

மொத்த இலாப வீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 38.1%ஆக இருந்து 39.0%ஆக உயர்வடைந்துள்ளது. மேலும் புதிய இணைப்புகளுக்கான குறைவான தேவை மற்றும் தற்போதைய வாடிக்கையாளர்களின் சேவை வெளியேற்றம் போன்ற சவால்மிக்க சந்தை நிலவரங்கள் மத்தியில் இந்த நடுத்தர வளர்ச்சி அடையப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# HUTCH இன் வியத்தகு சேமிப்புக்கள்




இலங்கையில் முதல்முறையாக, ஹோம் புரோட்பான்ட் மற்றும் மொபைல் டேட்டா ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்து, தனித்த மற்றும் சௌகரியமான திட்டமாக அமையும், புத்தாக்கமான 2-in-1 திட்டத்தை HUTCH 2X அறிவித்துள்ளது.

சிக்கனமான வழியில் இணையத்தை அணுகுவதற்கு தனித்தனியாக ஹோம் புரோட்பான்ட் இணைப்பு மற்றும் ரவுட்டருக்கான முதலீடு ஆகியவற்றுக்கான தேவையைப் போக்கி, புதிய தரஒப்பீட்டு நியமமாக இந்த புத்தாக்கமான தீர்வு அமைந்துள்ளது. HUTCH 2X சந்தாதாரர்கள் எவ்விதமான சிரமங்களுமின்றி, தமது ஸ்மார்ட் போன்களை புரோட்பான்ட் தீர்வாகப் பயன்படுத்தி, வீட்டில் hotspot ஊடாக Wi-Fi இணைப்பு மற்றும் எங்கிருந்தும் மொபைல் டேட்டா இணைப்பு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

HUTCH 2X ஆனது மிகச் சிறந்த மதிப்புடன், அதியுயர் தர டேட்டா அனுபவத்தை ஒன்றிணைக்கின்றது. 50GB க்கு ரூபா 1,099/- என்ற மிகக் குறைந்த கட்டணத் திட்டம் முதல்

அனைத்து வரிகளும் உள்ளடங்கலாக வரையறையின்றிய இணைய திட்டமான ரூபா 4,999/- வரையில் பல வகைப்பட்ட திட்டங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

# பிளாஸ்திக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டம்




திண்மக் கழிவை நிர்வகிப்பதில் எழுந்துள்ள சவால்களுக்கு மத்தியில், Deutsche Gesellschaft fürInternationale Zusammenarbeit (GIZ) GmbH The Coca-Cola Foundation உடன் இணைந்து Coca-Cola Sri Lanka Beverages Ltd., நெஸ்லே மற்றும் யுனிலீவர் ஆகிய இலங்கையிலுள்ள விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் தயாரிப்புக்களின் மூன்று பாரிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து, பிளாஸ்திக் மாசுபாட்டைச் சமாளித்து, பிளாஸ்திக் கழிவுகள் மூலமாக வெளிக்கொண்டு வரக்கூடிய வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளும் இலக்குடன் நிலைபேணத்தக்க பிளாஸ்திக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்வந்துள்ளன. 'Waste to Value' எனப் பெயரிடப்பட்ட அரச-தனியார் கூட்டாண்மையானது பிளாஸ்திக் கழிவு சேகரிப்பு, தரம் பிரிப்பு, மீள்சுழற்சி மற்றும் மீள்பயன்பாடு ஆகியன தொடர்பான உட்கட்டமைப்பினை வலுப்படுத்தி, பொறுப்புடன் கழிவை அகற்றுவதால் வாழ்வாதாரங்கள் மற்றும் சூழலுக்கு கிடைக்கின்ற மதிப்பு தொடர்பான விழிப்புணர்வைத் தோற்றுவித்து சுழற்சிப் பொருளாதாரத்தை நோக்கிய நடத்தை மாற்றத்தை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஜேர்மன் கூட்டாட்சி அமைச்சின் (German Federal Ministry for Economic Cooperation and Development - BMZ) நிதியுதவியுடன் அதன் கூட்டமைப்பு பங்காளர்களுடன் இணைந்து முன்னெடுக்கும் அதன் develop நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமாக, பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கூட்டாண்மையுடன் இரு கட்டங்களாக இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டில் இதற்கான ஆரம்பகட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், சேகரிக்கப்படுகின்ற தொன் அளவு, கிடைக்கின்ற இட வசதி, தரம் பிரிப்பு மற்றும் மீள்சுழற்சிக்கான வளர்ச்சி வாய்ப்புக்கள் அடங்கலாக, மேல் மாகாணத்தில் உள்ளூர் அதிகாரசபைகளின் பிளாஸ்திக் கழிவின் பின்னணியை விளங்கிக் கொள்வதற்கான அடிப்படை ஆய்வை இக்கூட்டமைப்பு முன்னெடுத்திருந்தது. முழுமையான ஆய்வைத் தொடர்ந்து, இச்செயற்திட்டத்திற்காக ஒன்பது உள்ளூராட்சி சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

# "Diriyen Idiriyata" பெண் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டம்!



இலங்கையில் வங்கி அல்லாத நிதிச் சேவைகளை வழங்குவதில் முன்னோடியான பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் முழுமையான உரிமையாண்மையின் கீழான ஒரு துணை நிறுவனமான **People's Micro–Commerce Ltd** இன் ஏற்பாட்டில், வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கப்படுகின்ற, "**Diriyen Idiriyata**" என்ற பெண்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டம் நிறைவுற்றுள்ளது. சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களின் ஒரு அங்கமாகவும், பல்வகைப்பட்ட சந்தை மட்டங்களில், இலங்கையில் பெண் தொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சியை வழங்கவுமே இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "**Diriyen Idiriyata**" பெண் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண கட்டமானது ஹோமாகமை மற்றும் சீதாவக்கை பிராந்தியங்கள் மீது கவனம் செலுத்தியிருந்தது. **People's Micro-Commerce Institute** இன் அனுசரணையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள 300 க்கும் மேற்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் கிராமிய மாதர் சங்கங்களின் தலைவர்கள் பங்குபற்றியுள்ளனர். பயிற்சியின் பின்னர் **People's Micro-Commerce** இன் தலைவர் திரு. பிரதீப் அமிர்தநாயகம் அவர்கள் பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கு மிகவும் மதிப்புள்ள சான்றிதழ்களை கையளித்து வைத்தமை இந்நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்தது.

# TVS ரைடர் அறிமுகம்



**TVS** மோட்டார் நிறுவனம் (**TVSM**) – இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனப் பிரிவுகளில் இயங்கும் ஒரு முன்னணி உலகளாவிய வாகன உற்பத்தியாளர், அதன் புதிய அம்சங்கள் நிறைந்த நிறைந்த **TVS Raider** 125 ஐ இன்று இலங்கையில் அறிமுகப்படுத்தியது. ஸ்போர்ட்டி மோட்டார்சைக்கிள் எல்சிடி டிஜிட்டல் ஸ்பீடோமீட்டர், 3ஏ ஐடச் ஸ்டார்ட், அனிமலிஸ்டிக் எல்இடி ஹெட்லேம்ப் மற்றும் முதல்– ஆசனத்துக்குக் கீழான சேமிப்பு போன்ற அம்சங்களுடன் வருகிறது.

**TVS** ரைடரில் சக்திவாய்ந்த 125**CC** எஞ்சின் பொருத்தப்பட்டுள்ளது, இது ஒரு சுகமான சாகசம் நிறைந்த சரியான சக்தி மற்றும் செயல்திறனை வழங்குகிறது, அதன் நுணுக்கமான, ஆக்ரோஷமான ஓட்டத்துக்கான வடிவமைப்பு மூலம் அது வீதியில்போகும் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைக்கின்றது. எரிபொருள் திறன், வேகம் மற்றும் ஹெல்மெட் அறிவுறுத்தல் உள்ளிட்ட நிகழ்நேர தகவல்களை வழங்கும் மேம்பட்ட டிஜிட்டல் கட்டுப்பாட்டை இது கொண்டுள்ளது.

# AMW Katana டயர்களின் புதிய வரிசை வெளியீடு

வாகனத் துறையில் சிறந்து விளங்குவது என்பதற்கான பெயராக திகழும் **Associated Motorways (AMW)** நிறுவனம், டயர் தயாரிப்பில் அதன் சமீபத்திய புத்தாக்க கண்டுபிடிப்பான **AMW** முயவயயெ டயர்களின் புதிய வகைகளை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது.

75 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தை கட்டியெழுப்பி வரும் **AMW**, இலங்கையில் வாகனங்களுக்கான தீர்வுகளை வழங்குவதில் தொடர்ச்சியாக முன்னணியில் இருந்து வருகிறது. அந்த வகையில் **AMW** தனது

AMW KATANA
Warrior of the Streets

புதிய டயர் வரிசைகளை **AMW** முயவயயெ என்ற வர்த்தகநாம பெயரில் அறிமுகப்படுத்துகிறது. இவை குறிப்பாக **Yamaha** மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் ஆகிய இரு சக்கர வாகனங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடைபயணம் மற்றும் ஓட்டம்



உலக அல்சைமர் மாதமாக செப்டம்பெர் மாதமும், உலக அல்சைமர் தினமாக செப்டெம்பர் 21ஆம் திகதியும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நிலையில், அல்சைமர் நோய் சர்வதேச அமைப்பின் உறுப்பினரான லங்கா அல்சைமர் மன்றம் தொடர் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

ஒரு மாத கால விழிப்புணர்வு பிரசாரத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும் வகையில், நினைவாற்றல் இழப்பு மற்றும் ஆற்றல் குறைவு போன்ற அறிகுறிகளைக் கொண்ட ஒரு வகை டிமென்ஷியாவான அல்சைமர் நோய் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த கொழும்பின் அடையாளமாக விளங்கும் தாமரைக் கோபுரக் கட்டடம் செப்டெம்பர் 1ஆம் திகதி சிற்பு நிறத்தில் ஒளிரும்.

டிமென்ஷியா ஏற்படுத்துவதை காலதாமதப் படுத்தும் அல்லது தடுக்கும் உடல் ரீதியான மற்றும் உளரீதியான பயிற்சியை ஊக்குவிக்கும் வகையில் லங்கா அல்சைமர் மன்றம் செப்டெம்பர் 07ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இருந்து "**Run to Remember**" என்ற 5 கிலோ மீற்றர் ஓட்ட நிகழ்வையும், செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப 7.30 மணிக்கு கொழும்பு சினமன்ட் கிராண்ட் ஹோட்டலில் இருந்து என்ற நிகழ்வையும் ஏற்பாடு செய்துள்ளது.

# உலகளாவிய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு 2024 (GAIN)






காலித் ஹமூத் அல்-கஹ்தானி,
இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர்

சவூதி அரேபிய பட்டத்து இளவரசர், பிரதமர், மற்றும் சவூதி தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையத்தின் (SDAIA) இயக்குநர்கள் குழுவின் தலைவராகிய முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அசீஸ் அவர்களின் ஆதரவில், வருகின்ற செப்டம்பர் மாதம் 10-12 ஆம் திகதி வரை மூன்றாவது உலகளாவிய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு (GAIN) இடம்பெறவுள்ளது.

உலகளாவிய செயற்கை நுண்ணறிவுத் துறை சார் வல்லுனர்கள், சர்வதேச தலைவர்கள் ஒன்று கூடவுள்ள இம் மாநாடானது, சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் உள்ள மன்னர் அப்துல் அசீஸ் சர்வதேச மாநாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த உச்சி மாநாடானது முழுவதுமாக சவூதி தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையத்தால் (SDAIA) ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படுகிறது.

இம்மாநாட்டின் போது, புத்தாக்க செயற்கை நுண்ணறிவு, நகர்ப்புற வாழ்க்கையில் செயற்கை நுண்ணறிவு, மற்றும் செயற்கை நுண்ணறிவின் நெறிமுறை ஆளுமை போன்ற முக்கிய கருப்பொருள்கள் பல தொடர்பாக ஆராயப்படவுள்ளதோடு இவற்றின் மூலம் சமூகம், வணிகம் மற்றும் ஆளுமை ஆகியவற்றில் ஏற்படும் தாக்கம் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

**Accenture, Oracle,Dell Technologies, Simens, Boston Dynamics**, மற்றும் **Google Cloud** போன்ற தொழில்துறை ஜாம்பவான்களும் இவ்வுச்சி மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த உச்சி மாநாட்டில் 100க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 300க்கும் அதிகமான பேச்சாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

உலகத் தலைவர்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு நிபுணர்களும் இவர்களுள் அடங்குவர்.

இவர்கள் செயற்கை நுண்ணறிவு சார் கலந்துரையாடல்கள், விவாதங்களை முன்னெடுப்பதோடு மட்டுமல்லாமல், உலகளாவிய செயற்கை நுண்ணறிவு சார் முயற்சிகளை இயக்கும் வகையிலான சர்வதேச ஒத்துழைப்புகளுக்கு வழி சமைப்பதோடு, எல்லைகளைக் கடந்த நெறிமுறை புத்தாக்கங்களையும் ஊக்குவிப்பர்.

இந்த உச்சி மாநாட்டில், பொது செயற்கை நுண்ணறிவின் எதிர்காலம் குறித்த கலந்துரையாடல், செயற்கை நுண்ணறிவு சக்தியூட்டப்பட்ட துல்லிய மருத்துவம் குறித்த குழுக் கலந்துரையாடல்கள், நிலையான வளர்ச்சி மற்றும் ஸ்மார்ட் நகரங்களில் செயற்கை நுண்ணறிவின் பங்கு குறித்த பட்டறைகள் போன்ற உயர்மட்ட அமர்வுகளும் நடைபெறவுள்ளன.

சவூதி தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையத்தின் (SDAIA) தலைவர் கலாநிதி அப்துல்லா பின் ஷரப் அல் காம்தி கூறியதாவது:

"மூன்றாவது உலகளாவிய AI உச்சிமாநாட்டிற்கு நாங்கள் தயாராவதன் ஊடாக நாங்கள் ஒரு புதிய சகாப்தத்தில் நுழைகிறோம். இங்கே, யுஐ இனை இப்போது அது என்ன நிலையில் உள்ளது, மற்றும் அது வருங்காலத்தில் எத்திசை நோக்கிச் செல்கிறது. மேலும் நேர்மறையான எதிர்காலத்தை வடிவமைக்க நாம் தீர்க்க வேண்டிய நெறிமுறை சிக்கல்கள் என்பவற்றினூடாக ஆராய்ந்து




அனுகவிருக்கறோம். AI இன் திறனை முழுமையாக உணர்ந்து அதன் விளைவுகளை பொறுப்புடன் கையாள்வது முன்னெப்போதையும் விட முக்கியமானது."

பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களின் தலைமையின் கீழ், அனைவருக்கும் பயனளிக்கும் AI தொழில்நுட்பங்களை உருவாக்க சவூதி அரேபியா அர்ப்பணிப்புடன் இருப்பதாக அவர் மேலும் கூறியதோடு, சிறந்த எதிர்காலத்தை உருவாக்க AI எவ்வாறு உதவும் என்பதை ஆராய்வதற்காக, உலகளாவிய தலைவர்கள் மற்றும் கண்டுபிடிப் பாளர்களை ரியாத்திற்கு வரவேற்பதில் அவர் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்.

GAIN 2024 உலகளாவிய செயற்கை நுண்ணறிவு புத்தாக்கத்திற்கான ஊக்கியாக இருக்கும் அதே நேரம் பங்கேற்பா ளர்களுக்கு 120க்கும் மேற்பட்ட அமர்வுகளில் ஈடுபடவும், தொழில்துறை முன்னோடிகளுடன் உறவுகளை உருவாக்கிக் கொள்ளவும், உச்சி மாநாட்டின் போது அறிவிக்கப்படும் புரட்சிகரமான செயற்கை நுண்ணறிவு கூட்டுமுயற்சிக ளுக்கு பங்களிக்கவும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும். மேலும் இம்மாநாட்டின் போது SDAIA மற்றும் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இடையே பல ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் படவும், அறிவிப்புகள் வெளியிடப்படவும் உள்ளன.

---

# இலங்கையில் 'அதிகம் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள் வர்த்தகநாமமாக Honda



இலங்கையில் **Honda** வர்த்தக நாமத்திற்கான ஒரேயொரு விநியோகஸ்தராக விளங்கும் **Stafford Motor Co (Pvt) Ltd**. நிறுவனமானது, **LMD** சஞ்சிகையினால் முன்னெடுக்கப்பட்ட வர்த்தக நாமங்களின் 2024 வருடாந்த தரவரிசை பட்டியலில், வாகனத் துறையில் '**Most Loved Motorbike Brand**' (அதிகம் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள் வர்த்தகநாமம்) எனும் மதிப்புமிக்க பட்டத்தை வென்றுள்ளது என்பதை அறிவிப்பதில் **Honda** பெருமிதம் கொள்கிறது.

சஞ்சிகையின் இந்த தரவரிசை வெளியீடானது, நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களிடையை நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் அடிப்படையில் வர்த்தகநாமங்களை அங்கீகரித்து கௌரவிப்பதோடு, இது ஒரு வெகுமதியுமாகும்.

இந்த முக்கிய கௌரவமானது, **LMD** சஞ்சிகையின் வாசகர்களின் வாக்குகளால் தீர்மானிக்கப்படுவதோடு, பல ஆண்டுகளாக **Honda** மோட்டார் சைக்கிள்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகிறது.

இலங்கையில் மோட்டார் வாகன தொழிற்துறை எதிர்கொண்டுள்ள பெரும் சவால்களுக்கு மத்தியில் அபாரமான மீளெழுச்சி, வலிமை, நீடித்து வளரும் திறனை **Honda** வெளிப்படுத்தியுள்ளது.

# VIMAN ஜா- எல இன் அடிக்கல் நாட்டுவிழா



மிகவும் எதிர்பார்ப்பைத் தூண்டியுள்ள **VIMAN** ஜா - எல குடியிருப்புத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டுவிழாவை 2024 ஓகஸ்ட் 26ஆம் திகதி நடத்தி **John Keells Properties** நிறுவனம் குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைந்துள்ளது.

நிறுவனத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கு சான்றாக அமைந்த இந்த நிகழ்வில் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் ஆதனத் துறையின் தலைவர் நயன மாவில்மட, ஜோன் கீல்ஸ் குழுமத்தின் ஆதனத் துறையின் தலைவர் இனோக பெரேரா, பிரதம நிதி அதிகாரி ரவி விஜேவந்த, ஆதன முகாமைத்துவத்தின் தலைவர் ருசிரு அபேசிங்ஹ, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் தலைவர் நதீம் ஷம்ஸ் உள்ளிட்டோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

2023ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட **VIMAN** ஜா-எல குடியிருப்புத் ஏற்கனவே வெற்றிபெற்றுள்ளது.

114 அலகுகளுடன் இதன் முதலாவது கட்டம் அறிமுகப்படுத்தப் பட்டதுடன், இதற்கு மேலதிகமாக இரண்டாவது கட்டத்தில் 76 அலகுகள் காணப்படுகின்றன.

இத்திட்டம் பலமான நம்பிக்கையை வெளிப்படுத்தியிருப்பதால் இரண்டு கட்டங்களிலும் 70% ஆனவை ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டுள்ளன.